## வண்ணக்குறியீடு கொண்ட மருத்துவ படுக்கை வசதிகள்!

## முதலமைச்சரின் ‘சிசு பாதுகாப்பு’ பெட்டகம் –500 புதிய முதுநிலை மருத்துவ இடங்கள்!

# நகரம் - கிராமங்களில் 642 துணை சுகாதார நிலையங்கள்!

## சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் 118 அறிவிப்புகள்!

சென்னை, ஏப்.25-

**சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் 118 அடுக்கடுக்கான அறிவிப்புகளை அறிவித்தார். அந்த அறிவிப்புகள் வருமாறு:**

### அறிவிப்புகள்



**1. பதிமூன்று அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் 500 புதிய முதுநிலை மருத்துவப் பட்ட மேற்படிப்பு இடங்கள் (PG Seats) உருவாக்கப்படும்.**

இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், திருவள்ளூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, அரியலூர், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, கரூர் ஆகிய 13 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் 500 முதுநிலை மருத்துவ பட்ட மேற்படிப்பு இடங்கள் (PG Seats) உருவாக்கப்படும். இந்த மகிழ்ச்சியான செய்தியை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**2.ஐம்பது அரசு மருத்துவமனைகளில் ரூ.164.5 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்**

கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் சுகாதாரத் தேவைகளை மேம்படுத்தும் பொருட்டு மதுரை, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் உட்பட 21 மாவட்டங்களில் உள்ள 50 அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.164.5 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**3.தமிழ்நாடு முழுவதும் 300 துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் ரூ.137.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்**

வாடகை மற்றும் பழைய கட்டடங்களில் செயல்பட்டுவரும் 300 துணை சுகாதார நிலையங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ரூ.137.60 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, வாடகைக் கட்டடங்களில் பழுதடைந்து கிடக்கின்ற கட்டடங்களுக்கு 6,600 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படவிருக்கிறது.

**4.அறுபது அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூ.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்**

தமிழ்நாட்டின் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அத்தியாவசிய சுகாதார சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன. கிராமப்புற மக்களின் சுகாதார சேவைகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, 60 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூ.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**5. ஐம்பது மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை தேர்வு செய்து, டயாலிசிஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

முதல் முறையாக, கிராமங்களில் உள்ள 50 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை தேர்வு செய்து, அந்தப் பகுதியில் உள்ள தேவைப்படும் நோயாளிகளுக்கு டயாலிசிஸ் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் தனியார்/தன்னார்வலர்கள் பங்களிப்புடன் ஏற்படுத்தப்படும்.

இதுவரை டயாலிசிஸ் செய்வது என்பது நகர்புரங்களில், மாநகரங்களில் மட்டுமே இருக்கிறது. டயாலிசிஸ் யாருக்கெல்லாம் தேவைப்படுகிறது? சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டவர்கள் கிராமங்களிலும் இருப்பார்கள், மலைக் கிராமங்களிலும் இருப்பார்கள். அவர்களெல்லாம் நகர் பகுதிக்கு வந்து டயாலிசிஸ் செய்து மீண்டும் ஊருக்குச் செல்லும்போது அவர்கள் அடைகிற சிரமத்திற்கு அளவே இல்லை. எனவே, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்,

## கிராமங்களை நோக்கி டயாலிசிஸ் சிகிச்சை வசதிகள்!

இந்தியாவிலேயே முதல் முறையாக கிராமங்களை நோக்கி டயாலிசிஸ் சிகிச்சை வசதிகள், 50 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதியதாக டயாலிசிஸ் சிகிச்சை மையங்கள் அமைக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**6. தமிழ்நாட்டில் உள்ள 7,618 எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் மருத்துவ தேவைகளுக்காக மாதந்தோறும் ரூ.1,000/- நிதி உதவி வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள 7,618 எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களுடன் வசிக்கும், 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் மருத்துவ தேவைகளுக்காக மாதந்தோறும் ரூ.1,000/- நிதி உதவி வழங்கப்படும்.

பெருமதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், கடந்த வாரம் கேள்வி நேரத்தின்போது கேட்டார். எச்.ஐ.வி/எய்ட்ஸ் ஆல் பாதிக்கப்பட்ட அந்தக் குழந்தைகளுக்கு பாதுகாப்பு, அவர்களுக்கு வழங்கப்படும் தொகை குறித்து கேட்டார். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், கருணை உள்ளத்தோடு, தமிழ்நாட்டில் பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் எண்ணிக்கை 7,618 ஆகும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஒருமுறை ரூபாய் 5 கோடியை நிதியாகத் தந்து, தற்போது அறக்கட்டளைமூலம் ரூ.25 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதில் கிடைக்கும் வட்டியின்மூலம் 7,618 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் கல்வி மருத்துவ தேவைகளுக்கு மாதந்தோறும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஆயிரம் ஆயிரம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. “முதலமைச்சரின் சிசு பாதுகாப்புப் பெட்டகம்” ரூ.8.07 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

சிறப்பு பச்சிளம் குழந்தைகள் பிரிவுகளிலிருந்து (Special Newborn Care Unit) விடுவிக்கப்படும் 50,000-க்கும் மேற்பட்ட எடை குறைவான குழந்தைகளின் தொடர் கவனிப்பிற்காகவும் அவர்களது ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தவும், இரும்புச்சத்து சொட்டு மருந்து, வைட்டமின் டி3 மற்றும் மல்டி வைட்டமின் சொட்டு மருந்துகள் ஆகியவை அடங்கிய “முதலமைச்சரின் சிசு பாதுகாப்புப் பெட்டகம்” ரூ.8.07 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும். இந்த மகிழ்ச்சியான செய்தியை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**8. மக்கள் தொகைக்கேற்ப 642 நகர மற்றும் கிராம துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்.**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும், துணை சுகாதார துணை நிலையங்கள் (HSCs), சுகாதார அமைப்புகளுக்கும் மக்களுக்கும் இடையேயான முதல் தொடர்பு அமைப்பாகும். குறிப்பாக, கிராமங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் முதன்மை சுகாதார சேவைகளை வழங்குவதில் அவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. நகர்மயமாக்கல் காரணமாக 10,000 மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள பகுதிகளில், மக்கள் தொகைக்கேற்ப 642 நகர மற்றும் கிராம துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்.

இன்றைக்கு புதிதாக மக்கள்தொகைக்கு ஏற்ப கிராமங்கள் மற்றும் நகரங்களில் 642 புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**9.உடல் உறுப்பு தானம் செய்யும் நபர்களின் தன்னலமற்ற பங்களிப்பினை அங்கீகரித்து, பாராட்டுவதற்காக அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கௌரவச் சுவர் (Wall of Honour) நிறுவப்படும்**

மருத்துவத் துறையில் உடல் உறுப்பு தானம் செய்பவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தங்கள் உடல் உறுப்புகளை தானம் செய்தவர்களை அங்கீகரிப்பதற்கான ஒரு “நினைவுப்பாதை”யாக இக்கௌரவச் சுவர் (Wall of Honour) அமையும். இது சமூகத்தில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மேலும் உடல் உறுப்புத் தானங்களின் எண்ணிக்கையை ஊக்குவிக்கவும் உதவும்.

உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அரசு மரியாதை என்கின்ற வகையில் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். இனிமேல் உடல் உறுப்பு தானம் செய்தவர்களை—அமெரிக்காவிற்கு சென்றால் தெரியும், Washington, D.C.-ல் வியட்நாம் போரில் இறந்தவர்களின் பெயர்கள், படங்களையெல்லாம் மிகப் பெரிய சுவர்களில் வரைந்து வைத்திருப்பார்கள். ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும். அதுபோல உடல் உறுப்பு தானம் செய்யும் நபர்களின் தன்னலமற்ற பங்களிப்பினை அங்கீகரித்து, அவர்களை பாராட்டுகிற வகையில், அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் “கௌரவ சுவர்”-“Wall of Honour” ஒன்று நிறுவப்பட்டு, உடல் உறுப்பு தானம் செய்தவர்களுடைய பெயர்கள் அந்த சுவர்களில் பொறிக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**10.சட்டமன்ற உறுப்பினர்களுக்கான முழு உடல் பரிசோதனை திட்டம் செயல்படுத்தப்படும்**

முதல் முறையாக, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுடன் ஒருங்கிணைந்து முழு உடல் பரிசோதனை செய்யப்படும்.

நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்குமே முழு உடல் பரிசோதனை நாளையும், நாளை மறுநாளும் செய்யப்படவிருக்கிறது.

**11.அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், பராமரிப்பு டயாலிசிஸிக்கு உட்படும் அனைத்து நோயாளிகளுக்கும் புரதச்சத்து நிறைந்த உணவு வழங்கப்படும்.**

பராமரிப்பு டயாலிசிஸ் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு (Maintenance Hemodialysis) புரதம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகள் ஏற்படுகின்றன. இதற்குத் தீர்வாக, இந்நோயாளிகளுக்குப் புரதச்சத்து நிறைந்த உணவுகளான 150 மி.லி. பால், 2 வேகவைத்த முட்டையின் வெள்ளைக்கரு, 50 கிராம் சுண்டல், குறைந்த சோடியம் மற்றும் பொட்டாசியம் உள்ள 3 பிஸ்கட்கள் (>20 கிராம்) வழங்கப்படும்.

டயாலிசிஸ் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு உடனடியாக புரத சத்துள்ள உணவு வேண்டும். புரத சத்துள்ள உணவு இல்லையென்றால் உடல் பெரிய அளவில் சோர்வுற்று காணப்படும். எனவே, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள், மனிதநேயத்தோடு இன்றைக்கு அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் டயாலிசிஸ் சிசிச்சைக்காக வருபவர்களுக்கு புரதம் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் இனி வழங்கப்படும் என்று அறிவிக்கிறோம்.

**12.நூற்றிஏழு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் ரூ.80.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்**

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 107 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவான ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்கும் பொருட்டு, ரூ.80.25 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

**13.மதுரை அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு புதிய இடத்தில் ரூ.70 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படும்**

மதுரை-திருமங்கலத்தில் உள்ள அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு புதிய இடத்தில், மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம் கோ.புதுப்பட்டி கிராமத்தில் புதிய கட்டடங்கள் ரூ.70 கோடி செலவில் கட்டப்படும்.

மதுரை திருமங்கலம் அருகில் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்று 70 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவிருக்கிறது.

**14.நான்கு அரசு மருத்துவமனைகளில் புதிய அதிநவீன PET சி.டி.ஸ்கேன் (PET CT Scan) சேவைகள் வழங்கப்படும்**

கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் திருச்சி, விழுப்புரம், திருவள்ளூர் ஆகிய மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனைகளில், அரசு மற்றும் தனியார் பங்களிப்புமூலம் புதிய அதிநவீன PET சி.டி.ஸ்கேன் (Positron Emission Tomography CT Scan) சேவைகள் வழங்கப்படும்.

**15.எண்பத்து நான்கு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் வட்டார பொது சுகாதார அலகுகளுக்கான புதிய கட்டடங்கள் ரூ.54.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்**

“அனைவருக்கும் நலவாழ்வு” எனும் இலக்கை அடைவதற்காக, ஒருங்கிணைந்த அவசிய ஆய்வகம் மற்றும் இதர சேவைகளை வலுப்படுத்தும் வகையில், 84 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில், வட்டார பொது சுகாதார அலகுகள் (Block Public Health Units) அமைப்பதற்கான புதிய கட்டடங்கள் ரூ.54.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**16.இருபத்தைந்து அரசு மருத்துவக் கல்லூரிகளின் விடுதிகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம், செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், கடலூர் உட்பட 25 அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மருத்துவ மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**17.இரண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு புற்றுநோய்க்கான லீனியர் அக்ஸிலேட்டர் (LINAC) மற்றும் சி.டி.சிமுலேட்டர் (C.T.Simulator) ரூ.54 கோடி செலவில் வழங்கப்படும்**

இராமநாதபுரம் மற்றும் கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு புற்றுநோய்க்கான சிகிச்சை சேவைகளை வலுப்படுத்தும் நோக்கில் ஏழை எளிய மக்களுக்கு உயர்தர புற்றுநோய் சிகிச்சைக்கான அதிநவீன கதிர்வீச்சு சிகிச்சை வழங்குவதற்கு லீனியர் அக்ஸிலேட்டர் (LINAC) மற்றும் சிடி சிமுலேட்டர் (CT Simulator) வசதிகள் ரூ.54 கோடி செலவில் வழங்கப்படும்.

**18.ஐந்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிய அதிநவீன எம்.ஆர்.ஐ. ஸ்கேன் (MRI Scan) கருவிகள் ரூ.42.5 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

மருத்துவ சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, தேனி, கன்னியாகுமரி, சிவகங்கை, தருமபுரி, தூத்துக்குடி ஆகிய ஐந்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிய அதிநவீன எம்.ஆர்.ஐ. ஸ்கேன் (MRI Scan) கருவிகள் ரூ.42.5 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**19.தமிழ்நாட்டில் ரூ.29.67 கோடி செலவில் மருத்துவ சாதனங்கள் (A மற்றும் B வகைகள்) சோதனைக் கூடம் கோயம்புத்தூரில் நிறுவப்படும்**

மருத்துவ சாதன உற்பத்தித் துறைகளுக்கான மையமாக கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் வளர்ந்து வருவதால், கோயம்புத்தூரில் மருத்துவ சாதனங்கள் சோதனைக் கூடத்தைத் தொடங்குவது அவசியமாகிறது. இத்திட்டத்தின்மூலம் தரமான A மற்றும் B வகை மருத்துவ சாதன உபகரணங்கள் மக்களுக்கு கிடைக்க வழிவகைச் செய்யப்படும்.

**20. ஓமந்தூரார், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் உதகமண்டலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இருதய உள்ளூடுருவி கதிரியக்க ஆய்வகங்கள் (Cathlab) ரூ.15 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

ஓமந்தூரார், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் உதகமண்டலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மாரடைப்பிற்கான உயிர்காக்கும் உயர் சிகிச்சை அளிக்க இருதய உள்ளூடுருவி கதிரியக்க ஆய்வகங்கள் (Cathlab) ரூ.15 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

235 கோடி ரூபாய் செலவில் MRI, CT scan, Digital X-ray போன்ற பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப கருவிகள் 235 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படவிருக்கிறது. ஓமந்தூரார் பன்நோக்கு மருத்துவமனையை ஏதோ ஒரு காரணத்திற்காக மருத்துவமனையாக மாற்றினாலும், அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரை உண்மையிலேயே பன்னோக்கு மருத்துவமனையாக மாற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து cancer robotic equipment ஒன்றை வாங்கி தந்து இந்தியாவிற்கே ஒரு முன்மாதிரியான ஒரு பன்னோக்கு மருத்துவ

## தாய் சேய் நல மருத்துவமும் மகப்பேறு சேவைகளும்!

மனையாக மாற்றினார்கள். அதே மருத்துவமனையில் 7 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் cath lab ஒன்றும் உருவாக்கப்படவிருக்கிறது. இப்படி பல்வேறு அறிவிப்புகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

**21.எண்பத்தேழு புதிய அவசரகால ஊர்திகள் (BLS), 38 இலவச அமரர் ஊர்திகள், 38 புதிய உறைவிப்பான் பெட்டிகள் ஆகியன ரூ.26.71 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்**

தமிழ்நாட்டில் 1,353 அவசரகால ஊர்திகள் 38 மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தற்போது பழுதடைந்த வாகனங்களுக்கு மாற்றாக 87 புதிய அவசரகால ஊர்திகள் (BLS), 38 இலவச அமரர் ஊர்திகள், 38 புதிய உறைவிப்பான் பெட்டிகள் ஆகியன ரூ.26.71 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**22.பத்து அரசு மருத்துவமனைகளில் புதிய அதிநவீன சி.டி.ஸ்கேன் (CT Scan) கருவிகள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, திருச்சி, மதுரை, செங்கல்பட்டு, சிவகங்கை, திருவள்ளூர் ஆகிய ஆறு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பட்டுக்கோட்டை, மேட்டூர், மணப்பாறை, பொள்ளாச்சி ஆகிய நான்கு அரசு மருத்துவமனைகளில் புதிய அதிநவீன சி.டி.ஸ்கேன் (CT Scan) கருவிகள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**23.அரசு மருத்துவமனைகளுக்கு “காயகல்ப் (Kayakalp)” திட்டத்தின்கீழ் விருது அளிக்கப்பட்டு ரூ.25 கோடி ஊக்கத்தொகை வழங்கப்படும்**

“காயகல்ப் (Kayakalp)” திட்டத்தின்கீழ் அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் சுகாதாரம், தூய்மை மற்றும் துப்புரவு தொடர்பான தர நிலைகளில் மதிப்பீடு செய்யப்பட்டு, 70 சதவீதத்திற்கு அதிகமாக மதிப்பெண் பெறும் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விருது அளிக்கப்பட்டு ரூ.25 கோடி ஊக்கத்தொகை வழங்கப்படும்.

**24.தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மருத்துவக் கல்லூரிகளில் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையங்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகளான ஸ்டான்லி, திருச்சி, விருதுநகர், தூத்துக்குடி, திருவண்ணாமலை ஆகிய 5 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ், சுகாதாரம் சார்ந்த பன்முக ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்காக, பல்கலைக்கழக ஆராய்ச்சி மையங்கள் ரூ.25 கோடி செலவில் நிறுவப்படும்.

**25.மதுரை இராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனைக் கட்டடத்தில் கூடுதலாக மூன்று தளங்கள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

**தென் மா**வட்டங்களில் இளம் சிசு மற்றும் குழந்தைகள் நல சேவைகளை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, மதுரை இராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனைக் கட்டடத்தில் கூடுதலாக மூன்றுத் தளங்கள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**26. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 7 நாள் வண்ணக் குறியீடு கொண்ட படுக்கை விரிப்புகள் வழங்கப்படும்.**

நாள்தோறும் புதிய படுக்கை விரிப்புகளை பயன்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வண்ணத்துடன் கிழமைகள் பொறித்த வண்ணப்படுக்கை விரிப்புகள் உபயோகப்படுத்தப்படும். படிப்படியாக இத்திட்டம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாட்டில் முதல் முறையாக அரசு மருத்துவமனைகளில், இன்றைக்கு நாம் படுக்கை விரிப்புகளைப் பார்க்கிறோம். படுக்கை விரிப்புகளைப் பொறுத்தவரை கிழிந்த நிலையில், அழுக்கான நிலையில் பல்வேறு மருத்துவமனைகளுக்கு செல்கிறபோது இருக்கிறது. இன்றைக்கு அனைத்து மருத்துவமனைகளிலும் நாம் washing facility-ஐ செய்திருந்தாலும்கூட, கிழிந்த போர்வைகளை மாற்றுவதைப் பொறுத்தவரையில் சிறிது சுணக்கம் இருக்கிறது. எனவே, இந்த நிலையை அகற்றுகிற வகையில், தனியார் மருத்துவமனைகளுக்கு ஈடாக தினந்தோறும் ஒரு புதிய போர்வை படுக்கைமீது இருக்க வேண்டும் என்கிற வகையில் திங்கட்கிழமையா, திங்கட்கிழமை பொறித்த ஒரு படுக்கை விரிப்பு, செவ்வாய்க்கிழமையா, செவ்வாய்க்கிழமை பெயர் பொறித்த ஒரு படுக்கை விரிப்பு, செவ்வாய்க்கிழமை அந்த மருத்துவமனைக்கு செல்கிறவர், திங்கட்கிழமைக்கான போர்வை இருந்தால், என்ன நேற்றைக்கான போர்வையை இங்கே வைத்திருக்கிறீர்கள், இதை எடுங்கள் என்று சொல்லலாம். அந்த அளவிற்கு இன்றைக்கு தமிழ்நாட்டில் முதல் முறையாக அரசு மருத்துவமனைகளில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வண்ணங்களுடன் கிழமைகள் பொறித்த வண்ண படுக்கை விரிப்புகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றொரு சிறப்பான அறிவிப்பு.

**27. விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவிற்கு 100 படுக்கைகள் கொண்ட கூடுதல் தளங்கள் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்**

விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுக் கட்டடத்தில், தாய் சேய் நல சேவைகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக, 100 படுக்கைகள் கொண்ட கூடுதல் தளங்கள் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**28. காரைக்குடி மற்றும் நாங்குநேரி அரசு மருத்துவமனைகளில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டமைப்புகள் உருவாக்கப்படும்**

சிவகங்கை மாவட்டம்-காரைக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டம்-நாங்குநேரி ஆகிய 2 அரசு மருத்துவமனைகளில் தலா ரூ.9 கோடி வீதம் மொத்தம் ரூ.18 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.

**29.திருவாரூர் மாவட்டம்-திருத்துறைப்பூண்டி, திருவண்ணாமலை மாவட்டம்-போளூரில் உள்ள ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு (CEmONC) மையங்களுக்கு மொத்தம் ரூ.12 கோடி மதிப்பீட்டில் தாய்சேய் நலப் பிரிவுகள் கட்டப்படும்**

திருவாரூர் மாவட்டம்-திருத்துறைப்பூண்டி, திருவண்ணாமலை மாவட்டம்-போளூர் ஆகிய 2 அரசு மருத்துவமனைகளில் தாய்சேய் நல சேவைகளை வலுப்படுத்தும் விதமாக, ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்புக்கான (CEmONC) புதிய கட்டடங்கள், தலா ரூ.6 கோடி வீதம் மொத்தம் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்